Proceeding of International Conference on Contemporary Management - 2016 (ICCM-2016), pp 181-187

# நூலகத்தில் தனிநபர் வாழ்க்கை வரலாற்று நூல்களை ஒழுங்கமைத்தலும், நடைமுறைச் சிக்கல்களும்: தூயி தசமப் பகுப்பாக்கத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

மைதிலி .வி[1], நவநீதகிருஷ்ணன் .சு[2]


## ஆய்வுச்சுருக்கம்

நூலகம் ஒன்றிற்குரிய தகவற் சாதனங்களைச் சேகரித்தலில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அச்சாதனங்களை நூலகங்களிலே ஒழுங்கமைத்து வைக்கும் போது அதனிலும் கூடிய கவனம் தேவைப்படுகிறது. நேர்த்தியான பகுப்பாக்கம் மூலமே நூல்கள் பூரணமாக பயன்படுத்தப்பட வாய்ப்பு ஏற்படும். சரியாகப் பகுப்பாக்கம் செய்யப்படாதவிடத்துக் குறிப்பிட்ட விடயம் சார்ந்த நூலை நூலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள அதிக நேரம் செலவாகும். நூலகத்தில் தவறான இடத்தில் அமைவுபெறும் நூல் தொலைந்த நூலுக்கு ஒப்பானதாகக் கருதப்படக்கூடியது. ஒத்த பாடத்துறைகள் யாவற்றையும் ஓரிடப்படுத்தி, ஒழுங்கமைத்து வைத்துக்கொள்வதுதான் தகவற் சாதனங்களின் பூரண பயன்பாட்டிற்குரிய ஒரே வழிமுறையாகும். தகவற் சாதனங்கள் பலவுள்ளன. அவற்றுள் தனிநபர் வாழ்க்கை வரலாற்று நூல்களுக்குரிய தேவையும், முக்கியத்துவமும் தனித்துவமானவை. இவை நூலகத்தின்